# குறிஞ்சி மருத நிலங்களின் ஆடல்களும், துணைக்கலைகளும்

**தி.தர்மிகா**
சுவாமி விபுலானந்த அழகியல் கற்கைகள் நிறுவகம்,
கிழக்குப் பல்கலைக்கழகம்

சங்கம் வளர்த்து தமிழ் வளர்த்த சங்க காலத்திலே நில அடிப்படையிலான இயற்கையோடிணைந்த மக்களுடைய வாழ்க்கையில் அகத்திணை, புறத்திணை என்ற பண்புகளின் உள்ளடக்கமாகவும் பொழுதுபோக்கு, வழிபாடு காதல் என்று இக்கால ஆடற்கலை நிலவியிருந்ததனையும் இலக்கியங்கள் சுட்டிக் காட்டுகின்றது. அந்த அடிப்படையில் குறிஞ்சி நிலத்தில் ஆடப்பட்ட ஆடல்களாக் குரவைக் கூத்து, துணங்கைக் கூத்து போன்ற ஆடல்களையும் அவ் அவ் நிலத்தின் தன்மைக்கேற்ப ஆடல்களை ஆடினர். இவ் ஆடல்களையும், ஆடல்களுக்குப் புனையப்பட்ட ஒப்பனை முறையினையும் மற்றும் இசைக்கப்பட்ட இசைக் கருவிகளையும் குறிஞ்சி, மருத நிலங்களில் நோக்கப்படுகிறது.

## ஆடல்கள்

சங்க காலத்தில் குறிஞ்சி, மருத நிலங்களில் ஆடப்பட்ட ஆடல்களாக குரவைக் கூத்து, துணங்கைக் கூத்து, வெறியாடல், வாடாவள்ளி என நிலங்களுக்கேற்ப ஆடல்களை ஆடினர். இந் நிலங்களில் பொதுவாக ஆடப்பட்ட ஆடல்களாக குரவைக்கூத்து, துணங்கைக் கூத்து என்பன காணப்பட்டது.

குரவையானது குறிஞ்சி, மருதம் ஆகிய நிலங்களில் ஆடப்பட்ட போதிலும் ஒவ்வொரு நிலங்களிலும் வேறுபட்டே ஆடப்பட்டது. குரவையானது குறிஞ்சி நிலத்திலே பிறந்ததாக இலக்கியங்கள் சுட்டுகின்றது. இந் நிலக் குரவை முறை தழுவாத குரவை என்று குறிப்பிடப்படுகிறது. முறை தழுவாத குரவையானது “குரவை அயர்தல்” என அழைக்கப்பட்டது. ஏனெனில் கள் மயக்கத்தில் ஆடப்பட்ட குரவை முற்றிலுமாக மன மகிழ்ச்சிக்காக ஆடப்பட்ட நிலையில் நெறிமுறையற்றே ஆடப்பட்டிருத்தல் வேண்டும். அதனாலேயே குரவை அயர்தல் என அழைக்கப்பட்டது. ஆனால் மருத நில உழவர்கள் வெயில் வேளையில் நெல்லறுத்த தம் பணியின் களைப்புத் தீர தென்கடல் திரைமிசைப்பாயும் திண்திமில் வன்பரதவரின் வெப்புடைக் கள்ளுண்டு அங்கேயே குரவையாடி மகிழ்ந்தனர். ஆடவர் போலவே மருத நில மகளிரும் தென்கள் தேற் மாற்றிக் குரவையாடினர். நுண்ணிய தொழில்நலம் வாய்ந்த அழகிய குடங்களுடன் நீர்கொள்ளப் புறப்பட்ட அப் பெண்கள் விரிந்த பூங்கொத்துகளைக் கொண்டிருந்த காஞ்சி மரத்தடியில் குடங்களை வைத்துவிட்டு மர நிழலில் குரவையாடினர். குரவையின் பாடுபொருளாக அவரவர் கணவர் தம் பரத்தமை அமைந்த களனிகளில் நாரை ஓட்டிய இளம் பெண்கள் பொன்னாலாகிய அணிகலங்களுடன் இரவு பகலென இரண்டு பொழுதுகளிலும் பல்வேறு இடங்களில் புதிய புதிய குரவைகளை ஆடிக் கழித்தனர்.

குறிஞ்சி நில மக்கள் தம் இஷ்ட தெய்வமான முருகப் பெருமானுக்கு அடிக்கடி விழா எடுப்பதும், அவ் விழாவின்போது முருகனுக்குப் பிடித்தமான குரவைக் கூத்தை ஆடி மகிழ்வதுமாகிய பண்புகள் வெளிப்பட்டிருப்பதைக் காணமுடிகிறது. ஆனால் மருத நில குரவைக் கூத்தானது பொழுதுபோக்கு என்ற நிலையில் ஆடப்பெறும்போது வழிபாட்டுக் குரவையின் தன்மைகள், ஆடும் நெறிகள் ஆகியவற்றிலிருந்து பெரிதும் மாறுபட்டே நிகழ்ந்தது.

மகளிரால் ஆடப்பட்ட குறிஞ்சி நிலக் குரவைக் கூத்தானது குடும்ப அளவிலும், சமுதாய அளவிலும் என்று இரு விதமாக நிகழ்ந்துள்ளது ஆனால், மருதத்திலும் முன்னேற்பாடுகளுடன் மாநிழல் போன்ற இடங்களில் குடும்பம், குழு, சமுதாயம் என முதிர் மகளிரோடு குரவை தூங்கும் குறிப்பு குரவையானது குடும்ப அளவில் நிகழ்ந்தது என்பதைக் காட்டுவதாக அமைகிறது. இவ்வாறு குறிஞ்சி நிலக்

குரவையானது ஆடவர் ஆடியது, பெண்டிர் ஆடியது என்று குரவையாடல் எவ்வாறு காட்டப்பெற்றதோ அவ்வாறே ஆடவரும், பெண்டிரும் சேர்ந்தே குரவையாடிய தன்மைகளும் காட்டப்பெறுகின்றன.

அடுத்ததாக துணங்கைக் கூத்தை எடுத்துக்கொண்டால் குறிஞ்சி, மருதம் ஆகிய நிலங்களில் ஆடப்பட்ட போதிலும் இரு நிலங்களுக்கும் துணங்கைக் கூத்து வேவறுபட்டே ஆடப்பட்டது. குறிஞ்சி நிலத்தில் துணங்கைக் கூத்தானது பேய்த்துணங்கை தொடர்பக கூறப்பட்டிருக்கின்றது. முருகப்பெருமான் சூரன் முதலிய அசுரர்களை அழித்து பிணம் நிறைந்த போர்க்களத்திலே பேய்கள் மகிழ்ச்சி பொங்க துணங்கைக் கூத்து ஆடியது பற்றி குறிப்பிடப்பட்டிருக்கிறது.

"உலகறிய கதும்பின், பிறழ்பல் பேழ்வாய்"

மேற்குறிப்பட்ட பாடல் வரி பேய்கள் மகளிர் ஆடிய துணங்கைக் கூத்துப் பற்றி விபரிக்கிறது. அந்தவகையில் எண்ணெய் பசையின்றிக் காய்ந்த தலைமையிரையும், வரிசை ஒத்திராமல் மாறுபட்ட பற்கயையும், பெரிய வாயினையும் கோபத்தால் சுழல்கின்ற பெரிய கண்களையும், கொடிய பார்வையினையும், பிதுங்கி வழிவது போன்ற கண்களுடைய கோட்டானோடு கொடிய பாம்பும் அணியாகத் தொங்கி அசைவதால் பெரிய மாலைகளை மோதி வருகின்ற காதுகளையும், சொரசொரப்பான பெரிய வயிற்றையும் இருள் பொருந்திய வடிவையும், கண்டார் அஞ்சும் நடையையும்கொண்ட பேய் மகள் கூரிய நகங்களைக் கொண்ட தன் வளைந்த விரல்களால் கண்களைத் தோண்டி உண்ட மிகுந்த தீயநாற்றம் வீசும் பைந்தலையை வளையணிந்த பெரிய கையில் ஏந்திக்கொண்டும் அசுரர்களுக்கு அசைத்து பிணம் தின்னும் வாயினையுடையவளாய் துணங்கைக்கூத்து ஆடினாள் என்றவாறு பேய்களின் துணங்கைக் கூத்து தொடர்பான விபரணம் அமைந்திருந்தது. ஆனால் மருத நிலத்துத் துணங்கைக் கூத்தானது பெண்கள் பலர்கூடி கைகோர்த்து ஆடிய கூத்தே இதுவாகும். இசையோடு கூடி அதற்கு அமைவாகவே இவ்வாடல் தொடர்புபட்டிருந்தது.

"கலிகெழு துணங்கை ஆடிய மருங்கில்
வளைதலை முத ஆம்பல் ஆர்ணவும்"

என்பது மகளிர் துணங்கைக் கூத்தாடிய செய்தியாகும். மகளிரது தலையில் ஆம்பல் பூக்கள் சூடப்பட்டு அலங்கரிக்கப்பட்டிருக்கும். அவர்கள் ஆடியபோது அப்பூக்கள் உதிர்த்த வண்ணத்தைப் பற்றி பதிற்றுப்பத்தில் கூறப்பட்டிருக்கிறது. இதேவேளை போரில் வெற்றிபெற்ற மன்னன் பெண்களுடன் சேர்ந்து துணங்கை ஆடிய செய்தியும் உண்டு. பெண்கள் இருவர் ஆடும்போது விரல்களாலே அடித்தடித்துக் கூத்தாடும் ஒருவகை மகிழ்ச்சி கூத்தென அறியமுடிகிறது.

"குழையன் கோதையன் குறும் பைந்தொடியன்
வழவு அயர் துணங்கை தழ உகம் செல்ல"

காதணியை அகயிர் கொண்டவனாய் மாலையை உடையவனாய் சிறிய பசிய வளையல்களை உடையவனாய் தலைவ் விழாக் கொண்டாடும் இடத்திற்கு துணங்கை கூத்து ஆடுவோருக்கு தலைக்கை கொடுக்கச் சென்று கொண்டிருந்தான் என இப்பாடலடி மருத நிலத்தில் ஆடப்பட்ட மகளிர் துணங்கையை குறிப்பிடுகிறது.

இத்துணங்கை கூத்தானது எவ்வாறான உடல் அசைவுகளை கொண்டு ஆட்டத்தினை ஆடினார்கள் என்று பார்த்தால் குறிஞ்சி நிலத் துணங்கைக் கூத்தானது பயங்கரமான தன்மையினைக் கொண்டதாகவும், அதுமட்டுமன்றி "தோள் பெயர்" என்ற வரிகளின் மூலமாக பேய்கள் தங்களுடைய ஆட்டத்தின் விதம் முக்கியத்துவப்படுத்தப்படுகிறது. மருத நிலத் துணங்கையானது பேய்கள் மகிழ்ச்சி பொங்க ஆடியதாகவும், முருகப்பெருமான் அசுரனைக் கொல்ல ஆடிய கூத்தானது போர்க்களத்திலே

பேய் மகளால் நிகழ்ததப்பட்டதாகவும் கூறப்பட்டுள்ளது. பொழுதுபோக்கு ஆடலாக ஆடப்பட்டமைக்கான சந்தர்ப்பங்கள் அதிகமாக காணப்படுகின்றன. “எலி வளை மகளிர்த் துணங்கை” என்ற பாடல் வரியின் ஊடாக அறியலாம். இது “பெண்களின் ஆடல்” என (பதி.ப – 12), பரத்தையருடன் ஆடல் (ப.ப- 52), பரத்தையருடன் ஆடல் (அகம் - 33) என்றும் பல்வேறு வடிவங்களில் துணங்கைக் கூத்துப் பற்றிய செய்திகள் காணப்படுகின்றன. இவ்வாறு குறிஞ்சி, மருத நிலங்களில் ஆடப்பட்ட துணங்கைக் கூத்தானது இரு நிலங்களிலும் ஆட்டமுறை வேறுபட்டு காணப்படுகின்றது.

குரவையும், துணங்கையும் ஒப்பிட்டு நோக்குகையில் இரண்டுமே வேறுபட்டே காணப்படுகின்றது. குரவையானது இருபாலாராலும் ஆடப்பட்டது. ஆனால் துணங்கை மகளிரால் மட்டும் ஆடப்பட்டது. இருந்த போதிலும் ஒரு ஒற்றுமையுண்டு குறிஞ்சி நிலக் குரவையில் தலைத்தந்து என்பது மகளிருக்கு ஆண்மகன் முதலில் கொடுக்கும் கை என்று பொருள்படுகின்றது. அந்த வகையில் குறவர் குடிமக்களுக்கு முருகன் முதற்கை தந்து இக் கூத்தை ஆடிய விதம் குறிப்பிடப்படுகின்றது. மருத நிலக் குரவையில் இரு பாலாரும் பங்குகொள்ளும் குரவையில் “தலைக்கை தருதல் அல்லது தலைத்தருதல்” என்ற முறையும் முக்கியமான நெறியாகப் பின்பற்றப்பட்டு வந்தது. தலைவன் ஒருவன் கூடி ஆடும் வேளை தான் விரும்பியவருக்கு தலைக்கைதந்து ஆடுதலையே பெருமிதமாக எண்ணியிருப்பான். ஆனால் மருத நிலத் துணங்கைக் கூத்தில் தலக்கை தருவது ஆடவள் பங்காக இருந்தது. எளியவள் முதல் மன்னர்கள் வரை துணங்கை ஆட்டத்திற்கு தலைக்கை தந்து மகிழ்ந்துள்ளனர். இவ்வாறு தலைக்கை தந்தாடும் ஆடவரின் கீழ் ஆடை அதில் ஆடும் பெண்களின் தாழை ஆடைகளிலிருந்து அவற்றில் தைக்கப்பட்ட ஆம்பல் மலர்கள் கீழே விழுந்து இதழ்கள் சிதறும் அளவிற்கு ஆடலில் விரைவு காணப்பட்டது.

குறிஞ்சி, மருத நிலத்தில் ஆடப்பட்ட குரவைக் கூத்து, துணங்கைக் கூத்து போன்றவற்றிற்கு வேறுபாடுகள் அதிகமாகக் காணப்பட்டது. குரவை ஆயத்தமின்றி நிகழ்ந்தது. ஆனால் துணங்கை தகுந்த ஆயத்தங்களுடன் விழாப்போல திகழ்ந்தது. ஆடுவோர் சிறப்பைத் தழுவி அமைந்தது. ஆனால் குறிஞ்சி, மருத நிலக் குரவைக் கூத்தானது அந்தந்த இடச் சிறப்புடையதாகக் காணப்பட்டது. குரவைக்குப் பாடல்களும் பின்னணியாக அமைந்தது. குரவைக்காக பாடப்பட்ட பாடல் “கொளை” என்ற பெயர்கொண்டு அழைக்கப்பட்டது. ஆனால் துணங்கை பாடும் வளக்கம் உண்டு. குரவைக்கு இதற்கென நியமித்த காலம் இல்லை. பொதுவான ஒரு மக்கள் கூத்தாக ஆடினர். ஆனால் துணங்கை மகளிர் கூத்தாகக் காணப்பட்டது. இவ்வாறு குரவையையும், துணங்கையையும் நோக்குகையில் வேற்றுமைகள் அதிகமாகக் காணப்படுகிறது. இரு கூத்துக்களும் குழு நடனம் என்பதே ஓர் ஒற்றுமையாகும்.

வாடாவள்ளி குறிஞ்சி நிலத்தில் ஆடப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. வேலன் வெறியாடல் வேலனால் ஆடப்பட்ட குறிஞ்சி நிலத்திற்குரிய ஆடலாக அமைந்தது.

வெறியாட்டத்தினையும் குரவையையும் ஒப்பிட்டு நோக்குயையில் ஒரே நிலக் கூத்துக்கள் என்பதே ஒற்றுமை. ஆனால் இவற்றை ஆராய்ந்தால் இவ்விரு கூத்துக்களின் தன்மைகள் வேறுபட்டே காணப்பட்டது. குரவை குறிஞ்சியில் பிறந்தாலும் கூட பிற நிலங்களுக்கும் பரவியுள்ளது. ஆனால் வெறியாட்டு பிற நிலங்களில் ஆடப்படவில்லை. குரவை குழு நடனம் ஆனால் வேலன் வெறியாடல் தனியொருவரால் ஆடப்பட்டது.

முருகப்பெருமானுக்கு அடிக்கடி விழா எடுப்பதும், அவ்விழாவிற்கு சுற்றத்தாரை அழைப்பதும், அவ்விழாவின்பேது முருகனுக்குப் பிடித்தமான குரவைக் கூத்தை ஆடி மகிழ்வதுமாக இருந்தார்கள் என்பதை அறியமுடிகிறது. அது மட்டுமன்றி முருகப்பெருமான் எழுந்தருளி குறவர் குடிப்பெண்களோடு

குரவையாடிய செய்திகளும் கூறப்பட்டள்ளது. இவர்கள் குழுவாகவே குரவைக் கூத்தை ஆடினார்கள். மருத நிலக் குரவையானது ஓர் இடத்தில் பலர் இணைந்து சிறு சிறு பல குழுக்களாகப் பிரிந்து குரவையை நிகழ்த்தினர். இதனூடாக குரவை குழு நடனமாக ஆடப்பட்டது. ஆனால் வெறியாட்டு தனியொருவரால் ஆடப்பட்டது. அதாவது தெய்வம் மக்கள் மீது ஆடுவதை வெறியாடல் என்பர். வெறி என்னும் பல பொருள் ஒரு சொல் இங்கு தெய்வத்தைக் குறிக்கும். முருகக் கடவுளை வழிபடுவதற்காக நிகழ்த்தப்படும் சடங்கு சார்ந்த ஆட்டக்கலை வேலன் வெறியாட்டு எனப்பட்டது. இது தெய்வம் ஏற்பட்டு தனி ஒருவரால் ஆடப்படும் ஆடல் ஆகும். குரவையில் கையாளப்படும் ஆடல் நெறிகள் எதுவும் வெறியாட்டில் கையாளப்படுவதில்லை. வெறியாடலில் முருகனை ஆற்றுப்படுத்துவதாக அமைந்திருந்தது. இவ்வாறே குரவைக்குப் பாடலிருந்தது, வெறியாடலில் படிமம் இருந்தது. வேல் வேலனுக்குப் படிமாக இருந்தது, ஆனால் குரவைக்குப் படிமம் இல்லை. இவ்வாறு வேலன் வெறியாடலுக்கும் குரவைக்கும் பல வேற்றுமைகள் காணப்படுகின்றது.

வேறியாட்டினையும் துணங்கையையும் நோக்குகையில் வெறியாட்டு தனியொருவரால் ஆடப்படுவது, துணங்கைக் கூத்து மகளிரால் ஆடப்பட்டது. வேலன் எறப்பெற்று வெறியாட்டு ஆடப்பட்டது. ஆனால் துணங்கை கூத்தில் இளம் மங்கையர்கள் பங்குபற்றியதாகவும், அவர்கள் தம்முள் ஒருவரை ஒருவர் தழுவி ஆடியதாகவும் உள்ளது. மேலும் வெறியாடலுக்கு ஊது, கொம்புகள், ஆலய மணி என்பனவும் பக்க இசைகளாகப் பயன்படுத்தப்பட்டு இவ்வாடல் ஆடப்பெற்றது. ஆனால் துணங்கைக் கூத்து முழவு வாத்தியம் வாசிக்க அதற்கு ஏற்றாற்போல் துணங்கைக் கூத்து இடம்பெற்றது. இவ்வாறு துணங்கைக் கூத்திற்கும், வெறியாடலுக்கும் வேற்றுமைகள் காணப்படுகின்றன. இருந்த போதிலம் ஒரு ஒற்றுமையும் உண்டு. துணங்கை, வெறியாடல் என்பன இரவில் ஆடப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.

இவ்வாறு சங்ககாலத்தில் குறிஞ்சி, மருத நிலங்களில் ஆடப்பட்ட இக் கூத்துக்கள் அனைத்தும் ஒன்றுக்கொன்று வேறுபட்டும், ஒற்றுமையும் காணப்பட்டுள்ளது என்பதை அறியக் கூடியதாகவுள்ளது. அத்தோடு குறிஞ்சி, மருத நிலங்களுக்குரிய மக்களின் வாழ்வியல் நிலை, பண்பாடு, தொழில் போன்றவற்றை ஒப்பிட்டு நோக்குவோமானால் ஒன்றோடொன்று வேறுபட்டுக் காணப்படுகின்றது. குறிஞ்சி மலையும் மலை சார்ந்தும், மருதம் வயலும் வயல் சார்ந்தும் காணப்பட்டு நிலங்களின் தன்மை ஒன்டோடொன்று வேறுபட்டுள்ளது என்பதும் அந்நிலங்களில் வாழ்ந்த மக்களின் தொழில், அவர்கள் வசிக்கும் குடில்களும் வேறுபட்டுக் காணப்பட்டது. ஒவ்வொரு நிலத்திலும் வாழ்ந்த மக்கள் தம் குடில்களை தம் நிலங்களில் கிடைத்த பொருட்களாலே அமைத்தனர். அவர்களின் நிலத்தின் தன்மைக்கேற்ப தொழில்களை அமைத்தனர்.

**ஓப்பனைகள்**

குறிஞ்சி, மருத நிலங்களில் பொதுவாக ஆடப்பட்ட ஆடலாக குரவைக் கூத்து, துணங்கைக் கூத்து காணப்பட்டுகிறது. இவ் நிலங்களில் ஆடப்பட்ட ஆடல்களுக்கு புனையப்பட்ட ஒப்பனையை நோக்குவோமாயின்; குரவையானது குறிஞ்சி, மருதம் ஆகிய நிலங்களில் ஆடப்பட்ட போதிலும் ஒவ்வொரு நிலங்களிலும் புனையப்பட்ட ஒப்பனையானது வேறுபட்டே காணப்பட்டது. குறிஞ்சி நிலத்தில் குரவையாடிய குறவர்கள் ஆடும்போது குறிஞ்சிப் பூவை தலையில் சூடி ஆடினார்கள். மருத நில உழவர்கள் வேங்கைப் பூவை தலையில் சூடி குரவையாடினார்கள்.

மேலும் இரு நிலத்திலும் குரவையாடும் போது எவ்வாறான ஒப்பனைகளை மேற்கொண்டு குரவையாடினார்கள் என்று ஒப்பிட்டுப் பார்த்தால் குறிஞ்சி நிலக்குரவையில் குறவர்கள் தங்களுடைய மார்பில் சந்தணத்தைப்பூசி வீசுகின்ற மலர்களாலான ஆடைய உடலில் அணிந்தும் மயில் போன்றும்

அழகுறத் தோற்றமளித்தனர். அவர்களுடன் இணைந்து ஆடிய முருகன் "தொடி" எனும் அணியைத் தோழில் அணிந்து, அந்தக்கச்சையை இடுப்பில் கட்டி அதற்குமேல் அணிகின்ற ஆடை நிலத்திலே புரளும் வண்ணம் உடுத்தி குரவை கூத்து ஆடப்பட்டது. ஆனால் மருத நிலக் குரவைக் கூத்தில் பொன்னாலாகிய அணிகலன்களுடன் இடையில் பூங்கொத்துக்களை தாழையுடன் இணைத்து செய்யப்பட்டிருந்த ஆடையையும் பொற்காசுகளாலான அணிகலன்களையும் அணிந்திருந்தனர் இவ்வாறு குறிஞ்சி, மருத நிலத்தில் புனையப்பட்ட ஒப்பனையானது காணப்படுகின்றது.

அடுத்ததாக துணங்கைக் கூத்திற்கு புனையப்பட்ட ஒப்பனைகளை நோக்குவோமாயின் குறிஞ்சி நிலத் துணங்கையில் பேய்களுக்கே உரிய இயல்பான தோற்றத்தோடு கொடிய விசப்பாம்புகளை அணியாகவும், கைகளிலே வளையல்களையும் அணிந்திருந்தனர். ஆனால், மருத நிலத் துணங்கைக் கூத்திற்குப் புனையப்பட்ட ஒப்பனையானது பொன்னாலான தலைக்கோலம் அணிந்து செவிகளில் பொற்குழைகளும் தோள்களில் பொற்றொடிகளும் முன் கையிடத்தே நிறைந்த வளையல்களும் பிணைந்த தாழையாடை அணிந்த இடைப்பகுதியில் இழையணியும் கால்களில் சிலம்பம் பூண்டனர். மார்பகத்தை முத்துமாலைகள், மலர்மாலைகள் அணியச் செய்தன. கூந்தலில் மயிர்சாந்து தடவி பல்வேறு மலர்கள் கூந்தலை அலங்கரித்தன. சிலர் பொன்னால் வட்டமாகச் செய்யப்பட்ட பாண்டினைச் சுற்றி மணிகள் காசுகள் சேர்த்து மேகலையுடன் அணிந்திருந்தனர்.

வாடாவள்ளி. வேறியாடல் என்பன குறிஞ்சி நிலத்தில் ஆடப்பட்ட ஆடலாக அமைந்தது. வெறியாடலிற்கும் குரவைக்கூத்திற்கும் புனையப்பட்ட ஒப்பனைகளை நோக்கினால் இவ்விரு ஆடலிற்கும் புனையப்பட்ட ஒப்பனை, அணிகலன்கள் என்பன வேறுபட்டே காணப்படுகின்றது. அதேபோலவே வெறியாடலுக்கும். துணங்கைக் கூத்திற்கும் புனையப்பட்ட ஒப்பனைகள் வேறுபட்டே காணப்பட்டது. அதாவது குறிஞ்சி, மருத நில மக்கள் தங்கள் நிலங்களுக்குரிய பூக்களை சூடியும் அதற்குரிய ஆபரணங்களை அணிந்தும் அந்தந்த ஆடலை ஆடினார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

**இசைக்கருவிகள்**

குரவைக்கூத்து, துணங்கைக்கூத்து, வாடாவள்ளி, வெறியாடல் போன்ற ஆடல்களுக்கு வாசிக்கப்பட்ட இசைக்கருவிகளை நோக்குவோமாயின் குறிஞ்சி நிலக் குரவை, துணங்கைக் கூத்திற்கு ஏற்றாற்போல் யாழ் வாத்தியத்தை வாசித்தனர். இதனை ;

"நல்யாழ் நவின்ற நயனுடைய நெஞ்சின்"

என்ற வரிகள் எடுத்துக் காட்டுகின்றன. ஆனால் மருத நிலத்து ஆடல்களுக்கு ஏற்ப யாழ் இசைவாத்திங்களை வாசித்தனர். இதனை ;

"ஆடினை என்ப – மமிழ்ந் - அதுவே
யாழ்இசை மறுகின் நீடுர் கிழவோன்
வாய்வாழ் எவ்வி ஏவல் மேவார"

என்ற வரிகள் எடுத்துக்காட்டுகின்றது. மற்றும் குறிஞ்சி யாழ் திறங்கள், பஞ்சுரம், படுமலை, மருள், அயிரப்பு, அரற்று, செந்நிறம் ஆகிய எட்டும் ஆகும். ஆனால் மருத நில யாழ் திறங்களாக நவிர், வடுகு, வஞ்சி, செய்திறன் ஆகிய நான்கும் ஆகும். வெறியாடல் ஆடும் போது யாழோடு குழலும் இசைக்கப்பட்டுள்ளது என்பதை ;

"வெறி ஆடு மகளிரொடு செறியத்தா அய

குழல் அகவ யாழ் முரஸ''

இவ்வடிகள் சான்றுபகிர்கின்றன.

அடுத்து இவ்விரு நிலங்களில் ஆடப்பட்ட ஆடல்களுக்கு பறை வாத்தியம் எவ்வாறு இசைக்கப்பட்டது என்பதை நோக்குவோமாயின் குறிஞ்சி நில ஆடல்களுக்கு ஏற்ற தொண்டக சிறுபறை வாசிக்கப்பட்டது ஆனால், மருத நிலத்து ஆடல்களுக்கு ஏற்ப பறை வாத்தியம் வாசிக்கப்பட்டது. மற்றும் குறிஞ்சி நிலத்தில் ஆடப்பட்ட வெறியாடலுக்கு ஊது கொம்புகள், ஆலய மணி என்பனவும் பக்க இசைகளாக பயன்படுத்தப்பட்டிருக்கின்றன. இதனை,

"கோடுவாய் வைத்து கொடுமணி இயக்கி''

என்ற வரி எடுத்துகாட்டுகின்றது. ஆனால், மருத நிலத்து ஆடல்களுக்கு காளைமுரசு, தண்ணுமை என்பனவும் வாசிக்கப்பட்டது.

கலைகளின் சிறப்பு யாதெனில் காலங்கள் கடந்தும் நிலைத்திருக்கின்ற தன்மையைப் பெற்றமையையாகும். கலை என்பது வெறுமனே அழகியல் வடிவமாக மாத்திரம் அமைந்துவிடுவதில்லை மேலாக கலை மனித வாழ்வியலின் இருப்பையும், செம்மையையும் தீர்மானிப்பதாகவும் அமைகிறது. அது மனித வாழ்வியலை ஒழுங்குபடுத்துகின்றது. அந்தவகையில் கலை மனித வாழ்க்கைச் செந்நெறியில் பின்னிப் பிணைந்திருக்கின்ற விதத்தினை உணர்ந்துகொள்ளாவிடின் நாம் முழுமையான மனிதர்களாகிவிட முடியாது. காதலும், வீரமும் பின்னிப்பிணைந்த பக்தியில் செம்மைப்படுத்தப்பட்ட அறவழிபட்ட சமுதாயத்தின் எச்சங்களே நாங்கள் என்பது உண்மை. எமது பழைய பண்பாட்டு மரபுகள் ஆடல் வடிவங்கள் என்பவற்றை இன்றைய தலைமுறைக்கு உணர்த்தப்பட வேண்டும்.

அந்தவகையில் குறிஞ்சி, மருத நிலங்களில் ஆடப்பட்ட ஆடல்களையும் இவ் ஆடல்களுக்கு புனையப்பட்ட ஒப்பனை முறையினையும் பற்றி அறிந்துகொள்வதோடு மட்டுமல்லாமல் இரு நிலங்களினதும் ஆடல் முறைகள் எவ்வாறு காணப்பட்டது என்பது பற்றியும் இவ்வாய்வின் மூலம் அறியலாம்.

**உசாத்துணை நூல்கள்**

1. ந. சுப்ரமண்யன் - இந்திய வரலாறு – நியூசெஞ்சுரி புக்ஹவுஸ், சென்னை – 1964
2. கா. ராஜன் - தொல்லியல் நோக்கில் சங்ககாலம் - உலக தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை – 2004
3. ஆ. இராமகிருட்டினன் - தமிழக வரலாறும் தமிழர் பண்பாடும் - சர்வோதயா இலக்கியப் பண்ணை, மதுரை – 2004
4. தமிழ்நாட்டு வரலாற்றுக் குழு – தமிழ் நாட்டு வரலாறு சங்ககால வாழ்வியல் - தமிழ் நாட்டுப் பாடநூல், சென்னை – 1983
5. கு. தாமோரன் - தொல்லியல் நோக்கில் தமிழகம் - அர்ச்சலொஜி, சென்னை – 1999
6. இரா. மோகன் - சங்க இலக்கியப் பத்துப்பாட்டு - நியூசெஞ்சுரி புக்ஹவுஸ், சென்னை – 2004
7. மா. ராம மாணிக்கனார் - பத்துப்பாட்டு ஆராய்ச்சி – சென்னை பல்கலைக்கழகம் - 1970
8. உ.வே. சாமிநாதையர் - பத்துப்பாட்டு மூலமும் நச்சினார்க்கினியர் உரையும் - தமிழ்ப் பல்கலைக்கழக வெளியீடு - 1986

9. முனைவர் இரகுராமன். சே – தமிழர் நடன வரலாறு – நந்தினி பதிப்பகம், சென்னை – 2006
10. பேராசிரியர் சிவசாமி வி. – தென்னாசிய சாஸ்திரிய நடனங்கள் (ஒரு வரலாற்று நோக்கு) – திருநெல்வேலி, யாழ்ப்பாணம் - 1998